# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

### O.S. 96/2021

## CNR.No.TNCB19000

Date: 21.07.2025 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | வேலுச்சாமி | **வயது** | 59 |
| **த/பெ** | பழனிச்சாமி | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | காளியப்பனூர் | **மாவட்டம்** | கோயமுத்தூர் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 21st July 2025

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இந்த வழக்கில் நான் முறையாக சொத்து விபரம் கொடுக்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் எத்தனை முறை வந்தார்கள் என்றால் 2 முறை வந்தார்கள் ஆனால் அளக்கவில்லை. நீதிமன்ற ஆணையாளர் என்ன அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையாளர் எனக்கு அறிக்கை தரவில்லை அதனால் என்னால் படிக்க இயலவில்லை.

பிரதிவாதிகள் ஆணையருக்கு என்ன குறிப்புரை கொடுத்தார்கள் என்ற விபரத்தை நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். அறிக்கை தாக்கல் செய்த பின்னர் பிரதிவாதிகள் தெரிவித்த ஆட்சேபனை குறித்து நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். சர்வேயர் எத்தனை வரைபடம் கொடுத்தார் என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்தார் எத்தனை என்று எனக்கு தெரியாது. மொத்தம் எத்தனை ஏக்கர் அளந்து எல்லை குறிக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்தேன் என்றால் 2 ஏக்கர் 50 செண்ட் ஆகும். மொத்தம் 8 ஏக்கர் 89 செண்ட் அளந்தால் தான் தாவா சொத்தின் எல்லையை நிர்ணயம் செய்யமுடியும்.

க.ச.எண்.168 மற்றும் 169 ஆகியவற்றில் உள்ள உட்பிரிவுகளையும் அளந்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு அளக்கும் போது அம்மாசை கவுண்டருக்கு வா.சா.ஆ.1 ன் படி

விற்கப்பட்ட சொத்தையும் அளந்தார்கள் என்றால் சரிதான். அம்மாசை கவுண்டர் தற்போது உயிரோடு இல்லை. அவருடைய வாரிசுகள் வரதம்மாள், சந்திரசேகர், இராஜேஸ்வரி , காளியண்ணன் மற்றும் பத்மாவதி ஆகியோர்கள் ஆவார்கள். காளியண்ணன் இறந்து விட்டார் அவரது மனைவி இருக்கிறார். தாவா சொத்தை அளக்க வரும்போது அம்மாசை கவுண்டரின் வாரிசுதாரர்களுக்கு அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் நான் தான் சொன்னேன். அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.16 – கூட்டுப்பட்டாவில் காளியண்ணன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அம்மாசை கவுண்டருக்கு விட்ட பொது வழி க.சா.எண்.168/4 மற்றும் 169/1 A ல் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்கிறது என்றால் சரிதான். அந்த விபரங்களையும் எனது தாவா சொத்து விபரத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 8 ஏக்கர் 89 செண்டில் தான் பொது வழி உள்ளது என்றால் சரிதான். பொது வழி சம்பந்தபட்ட பாத்தியதாரர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் அந்த வகையிலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

8 ஏக்கர் 89 செண்டில் பொது வழி எவ்வளவு செண்ட் இடம் ஒதுக்கப்பட்டது என்றவிபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். க.ச.எண்.168 மற்றும் 169 ல் என்ன என்ன உட்பிரிவு ஆனது என்பது பற்றிய விபரத்தை நீதிமன்ற ஆணையாளரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையாளர் கொடுத்த அறிக்கையில் தாவா சொத்தின் சொத்து விபரம் அதனுடைய எல்லைகள் தவறாக உள்ளதாக அறிக்கையில் உள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

நீதிமன்ற ஆணையாளர் எல்லையை நிர்ணயம் செய்யமுடியவில்லை என அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். க.ச.எண்.169 பூமியானது கிழமேலாக உள்ள தார் ரோட்டிற்கு தெற்கு என செக்குபந்தி விபரத்தில் குறிப்பிட்டுள்ளது தவறு என்று அறிக்கை அளித்துள்ள விபரம் என்கு தெரியும் என்றால் சரிதான். எனது பத்திரங்களில் உள்ள சொத்து விபரமும், தாவாசொத்தில் உள்ள சொத்து விபரமும் தவறானது என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையாளர் யார் சுவாதீனத்தில் இருந்து பயிர் செய்து வருகிறார்கள் என்று அறிக்கையில் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல.

நீதிமன்ற ஆணையாளர் கொடுத்த C-1 ஆவணத்தில் சர்வேயர் வரைபடம் - 2 என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி பிரதிவாதிக்கு விரோதமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு தென்புறமாக அரசாங்கத்தால் பாசனகுட்டை அமைத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த குட்டைக்கு எவ்வளவு இடம் அரசாங்கம்

எடுத்துக்கொண்ட விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதனையும் நான் எனது தாவா சொத்தில் கழித்து சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தாய்மாமா பழனிச்சாமிக்கு ஒதுக்கப்பட்ட 5.39 ஏக்கர் க.ச.எண்.168 /3 பூமி சேர்த்துதான் என்றால் சரிதான். மேற்படி ஏக்கர் 5.39 ல் க.ச.எண்.168/3 பூமியின் அளவு ஏக்.2.49 என்றால் எவ்வளவு எழுதி கொடுத்தார் என்று எனக்கு தெரியாது.

( குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது )

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.07.22 12:48:01 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.